Registered No. M-4345.

# யுத்த சஞ்சிகை.

மலர் I.] 1941-ம் ஆகஸ்டு 1௨, வெள்ளிக்கிழமை. [இதழ் 20

## தூரக் கிழக்கரங்கத்தில் - - - - - - - - - ஜப்பானுடைய அதிக்கிரமம். காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ள - - - - - - - - - - வேண்டுமென்ற எண்ணம்.

### ரஷ்ய யுத்தம் : ஜெர்மனியின் வற்புறுத்தல் ; குடியரசுகளின் ஒற்றுமை. இண்டோ-சீனாவில் யுத்த தளங்கள் : அமெரிக்கா-பிரிட்டன் பொருளாதார முற்றுகை.

தூரக்கிழக்கு அரங்கத்தில் சம்பவங்கள் வெகு துரிதமாய் நடைபெறுகின்றன. விஷி—ஜப்பான் ஒப்பந்தத்தை டோக்கியோ "ப்ரிவிகவுன்சில்" அங்கீகரித்துவிட்டது. இண்டோ—சீனாவில், ஜப்பானியர்களுக்கு எட்டு ஆகாய விமானத் தளங்கள் உபயோகிக்கும்படி விடப்பட்டன. தாய்லாந்தின் புதிய எல்லையிலுள்ள அங்காருக்கருகில் சீம் ரீப் விமானத் தளமும், சைகான் விமானத் தளமும் ஜப்பானியர் கையில் இருக்கின்றன. ஜப்பானியத் துருப்புகள் தெற்கு இண்டோ-சீனாவில் வந்து சேர்ந்திருக்கின்றன. காம்ரான் விரிகுடாவில் ஜப்பானிய யுத்தக் கப்பல்கள் வந்திருப்பதாகத் தெரிகிறது. சைகோனின்மேல் ஜப்பானிய வெடிகுண்டு விமானங்கள் பறந்தன.

ஜப்பான் இம்மாதிரி செய்வதில் யாதொரு ஆச்சரியமும் இல்லை. சென்ற செப்டம்பர் மாதத்தில், பிரிட்டிஷ் போராட்டத்தில் ஜெர்மனி வெற்றிபெறும் என்று நினைத்துக்கொண்டு, ஜப்பான் அச்சு நாடுகளின் ஒப்பந்தத்தில் சேர்ந்துகொண்டது. பிரிட்டன் மேற்கு அரங்கத்தில் போரிட்டுக்கொண்டிருக்கும் போது, வடக்கு இண்டோ-சீனாவில் பயமுறுத்தி ஹானாய், ஹெய்பாஸ், என்ற ராணுவத்தளங்களைக் கைப்பற்றிக்கொண்டது. இப்போது ரஷ்யா போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிறது ; ஜப்பான் காற்றுள்ள போதே தூற்றிக்கொள்ள விரும்புகின்றது.

இண்டோ-சீனாவில் உள்ள ஜப்பானிய தளங்கள் இந்தியாவுக்காவது, பர்மாவுக்காவது நேர்முகமாக ஒரு கெடுதியாக இல்லாதிருக்கலாம் ; ஏனென்றால் மத்தியில் தாய்லாந்து இருக்கிறது ; ஆனால் தாய்லாந்தை வற்புறுத்தி, கிழக்கிந்திய தீவுகளுக்கருகில் ஜப்பான் வருவதற்கு அவைகள் உபயோகப்படுத்தப்படலாம். சுங்கிங்கிலிருந்து வந்த ஒரு செய்தி ஜப்பான் தாய்லாந்தில் கடற்படைத் தளங்களும், ஆகாய விமானத் தளங்களும் வேண்டுமென்று தாய்லாந்து அரசாங்கத்தைக் கேட்டிருப்பதாகக் கூறுகிறது. இண்டோ—சீனாவை, விஷியும் ஜப்பானும் ஒன்றுசேர்ந்து பாதுகாப்பதாகக் கூறியது எவ்வளவு உண்மையற்ற விஷயம் என்று இதனால் தெரிகிறது. பிரிட்டன் இண்டோ—சீனாவைத் தாக்கப்போகிறது என்ற நொண்டிச் சமாதானத்தை ஜப்பானும், விஷியும் கூறிவிட்டு இம்மாதிரி செய்வது அவைகளினுடைய நோக்கத்தை நன்றாகக்காட்டுகிறது.

பிரெஞ்சு இண்டோ—சீனாவுக்கு விரோதமாக ஜப்பானியப் பத்திரிகைகள் கிளர்ச்சி செய்துகொண்டு வந்தன. இண்டோ—சீனாவை தூரக்கிழக்கரங்கத்து சிரியா என்று அவைகள் குறிப்பிட்டிருக்கின்றன. ஜப்பானுடைய அதிக்கிரமத்தைச் சரியென்று சொல்லுவதற்கு இந்த உபமானம் உபயோகப்படுத்தப்படுகிறதே ஒழிய, சிரியாவுக்கும், இண்டோ—சீனாவுக்கும், யாதொரு பொறுத்தமுமில்லை. பிரிட்டிஷார் சிரியாவில் பிரவேசித்ததற்கு விஷி அரசாங்கத்துக்குக் காரணம் காட்டியிருக்கிறார்கள் ; அதில், ஜெர்மானியர்கள் எங்கெங்கு செல்கிறார்களோ அங்கெல்லாம் சென்று நாங்கள் போர் புரிவோம் என்று கூறியிருக்கிறார்கள். இண்டோ—சீனாவில் ஜெர்மனியர்கள் பிரவேசிக்காததால், பிரிட்டிஷார் அதில் பிரவேசிக்கவேண்டிய அவசியமேயில்லை. தூரக்கிழக்கரங்கத்தில் ஜப்பான் எது வேண்டுமானாலும் செய்துவிட்டுத் தப்பித்துக்கொள்ளலாம் என்று நினைத்துக்கொண்டிருந்தால், அது தவறான எண்ணம் என்பதை லார்டு ஹாலிபாக்ஸ் விளக்கமாகக் கூறியிருக்கிறார்.

### வியாபார ஒப்பந்தங்கள் ரத்து.

தூரக் கிழக்கரங்கத்தில் குடியரசுகளெல்லாம் ஜப்பானுடைய அதிக்கிரமத்துக்கு விரோதமாக ஒன்று சேர்ந்திருக்கின்றன. பிரிட்டிஷ் ஏகாதிபத்திய நாடுகள், அமெரிக்கா, நெதர்லாந்து அரசாங்கம், சியாங் கேஷேக்கின் சீன அரசாங்கம்—இவைகளெல்லாம் ஜப்பானைப் பொருளாதாரத் துறையில் பகிஷ்கரிக்கச் சகல ஏற்பாடுகளும் உடனே செய்திருக்கின்றன. 1911-ம் வருஷத்திய ஆங்கிலோ—ஜப்பானிய வியாபார ஒப்பந்தம், 1934-ம் வருஷத்திய இந்திய — ஜப்பான் வியாபார ஒப்பந்தம் 1937-ம் வருஷத்திய பர்மா — ஜப்பான் வியாபார ஒப்பந்தம்-இவைகளெல்லாம் ரத்தாய் விடும் என்று பிரிட்டன் எச்சரிக்கை அறிவிப்பு செய்திருக்கிறது. அமெரிக்கா செய்ததைப்போல, பிரிட்டனும், தன்னுடைய ஏகாதிபத்தியத்திலுள்ள ஜப்பானிய சொத்துக்களை உறைந்து போகும்படி செய்து விட்டது—அதாவது அந்தச் சொத்துக்களை ஜப்பான் யுத்தகாலம் வரைக்கும் ஒன்றும் செய்ய முடியாது. சொத்துக்களை உறைந்து போகும்படி செய்வதால் ஜப்பானுக்கு அதிகக்கேடு நேரப் போவதில்லை. ஏனென்றால் அமெரிக்காவில் ஜப்பானுக்குள்ள சொத்து 13 கோடி டாலருக்கு மேல் இருக்கிறது. ஆனால் ஜப்பானில் அமெரிக்காவுக்குள்ள சொத்து 217 கோடி டாலர் இருக்கிறது. இதை ஜப்பான் உறைந்துபோகும்படி செய்துவிட்டது. ஆனால் ஏற்றுமதி, இறக்குமதி வியாபாரம் நிறுத்தப்படுவது ஜப்பானுக்குப் பெருத்த நஷ்டத்தை உண்டாக்கும். இனிமேல் ஜப்பான் வியாபாரம் செய்ய வேண்டுமானால் 'யென்' நாணயம் உபயோகப்படுத்தப்படும். மஞ்சுகுவோ, கொரியா, இந்த இரண்டு பிரதேசங்களுடன் தான் செய்யவேண்டும். பிரிட்டனிலும் அமெரிக்காவிலும் உள்ள சீன சொத்துக்கள் உறைந்துபோகும்படி செய்யவேண்டுமென்று சீன அரசாங்கத் தலைவர், மார்ஷல் சியாங்கே ஷேக் நேசதேச அரசாங்கங்களை வேண்டிக்கொண்டிருக்கிறார். இதனால், ஜப்பானால் அதிக்கிரமிக்கப்பட்ட சீனப் பிரதேசங்களினுடைய சொத்துக்களும் உறைந்து போகும்படி செய்யப்பட்டன. சீனாவில் உள்ள ஜப்பானுடைய பொம்மை அரசாங்கத்துக்கு இது மிகவும் பிரதிகூலமானது. ஆனால் சீனாவுக்கு நேசதேச அரசாங்கங்கள் வேண்டிய அளவுக்கு சீன சொத்துக்களை விடுவிக்கும்.

### முன் ஜாக்கிரதையான ஏற்பாடுகள்.

ஜப்பானுடைய அதிக்கிரமத்துக்கு எதிராக, குடியரசுகள் ராணுவ முன்ஜாக்கிரதையான ஏற்பாடுகளெல்லாம் செய்திருக்கின்றன. இதைக்குறித்து, பிரிட்டிஷ் அயல் நாட்டு மந்திரி, மிஸ்டர் ஈடன், காமன்ஸ் சபையில் குறிப்பிட்டிருக்கிறார். அவர் கூறியதாவது :—" ஜப்பான் செய்துவரும் முயற்சிகளை, தூரக்கிழக்கரங்கத்திலிருக்கும் தங்களுடைய உரிமைகளை அதிக்கிரமிப்பதற்காகச் செய்யும் முயற்சி

கள் என்று பிரிட்டிஷ் அரசாங்கம் கருதுகிறது. அமெரிக்க அரசாங்கத்துடனும், பிரிட்டிஷ் குடியேற்றநாட்டு அரசாங்கங்களுடனும், கலந்து மலேயாவில் தகுந்த பாதுகாப்பு ஏற்பாடுகளை அரசாங்கத்தார் செய்திருக்கிறார்கள்.'' ஆகாய விமானத்தளகர்த்தர், சர் ராபர்ட் புரூக்—பாப்பம், தன்னுடைய தலைமையின் கீழுள்ள ஏகாதிபத்தியத்துருப்புகள் எது நேர்ந்தாலும் அதற்குத்தயாராக இருப்பதாகக் கூறியிருக்கிறார்.

அமெரிக்காவும் அதிவிரைவாக ஏற்பாடுகள் செய்து கொண்டிருக்கிறது. அமெரிக்காவின் பசிபிக் கடற்படை, ஹாவேயிலுள்ள பெர்ல் துறைமுகத்தைவிட்டு வெளியே சென்றிருக்கிறது. பிலிப்பைன் தீவுகளிலுள்ள ராணுவப்பட்டாளங்களெல்லாம் அமெரிக்காவின் உபயோகத்துக்காக இப்போது தயாராக வைக்கப்பட்டிருக்கின்றன. லெப்டினெண்ட் ஜெனரல் டக்ளஸ் மகார்த்தின், அமெரிக்க பட்டாளங்களுக்கும், பிலிப்பையின் பட்டாளங்களுக்கும் பிரதம தளகர்த்தராக நியமிக்கப்பட்டிருக்கிறார். பத்திரிகைக்கு விடுத்த அறிக்கையில் புதிய பிரதம தளகர்த்தர் கூறியதாவது:—'' அமெரிக்க அரசாங்கம், தூரக்கிழக்கரங்கத்தில் ஒரு புதிய தலைமை ஸ்தானம் ஏற்படுத்தியிருப்பது ஒரு முக்கியமான அறிகுறி. இங்கு அமெரிக்காவுக்கு உள்ள உரிமைகளைப் பாதுகாக்க அமெரிக்கா தீர்மானித்திருக்கிறது என்பதை அது காட்டுகிறது'' அமெரிக்க அரசியல் உதவி மந்திரி, மிஸ்டர் சம்னர் வெல்ஸ் கூறியதாவது :—'' அமெரிக்காவும், பிரிட்டனும், ஒரே நோக்கத்துடன் இரண்டு பாதைகளில் போய்க்கொண்டிருக்கின்றன. இதர அமெரிக்க தேசங்களும் ஜப்பானுக்கு விரோதமாகச் செய்யும் பொருளாதாரக் கட்டுப்பாடு ஏற்பாடுகளில் ஒத்துழைப்பதை அமெரிக்க அரசாங்கம் பெரிதும் விரும்புகிறது.''

# இத்தாலிய ஆட்சியின் கீழ் ஆப்பிரிக்கர்கள் நிலைமை

## பெண்கள் மானபங்கம் செய்யப்பட்டனர்.

### முரட்டுத்தனமும், நாகரீகமற்ற தன்மையுமுள்ள இத்தாலியர்கள் செய்கை.

[பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத் துருப்புகளால் ஜெயிக்கப்பட்ட இத்தாலியக் கிழக்காப்பிரிக்காவில் முன்பு இருந்த கொடுமையைப் பற்றியும், கொடுங்கோன்மையைப் பற்றியும், பாபுலால் பாலி என்பவர் ஒரு கடிதத்தில் விபரமாகக் கூறியிருக்கிறார். அவர் இந்திய வைத்திய இலாகாவைச் சேர்ந்த ஒரு ஜமேதார். மத்திய கிழக்கரங்கத் துருப்புகளுடன் இருந்த ஒரு தொழிலாளப் பட்டாளத்துடன் வேலை செய்தவர். பூனாவில் பட்டாளத்துக்கு ஆள் சேர்க்கும் உத்தியோகஸ்தருக்கு அவர் எழுதிய அக்கடிதத்தில், இத்தாலிய ஆட்சியின் கீழ் ஆப்பிரிக்க மக்கள் பட்ட கஷ்டங்களை வர்ணித்திருக்கிறார். கடிதத்தில் கண்ட விவரங்கள் பின்வருமாறு :—]

'' நான் இதற்கு முன் எழுதிய கடிதம் உங்களுக்குச் சேர்ந்திருக்குமென்று நினைக்கிறேன். அதில், சூடானில் நாங்கள் எப்படிப்பட்ட வாழ்க்கையை நடத்திவருகிறோம் என்பதைப்பற்றி எழுதியிருந்தேன். இப்போது, புதிதாக ஜெயிக்கப்பட்ட இத்தாலியப் பிரதேசங்களில் நான் கண்ட அனுபவங்களைப்பற்றி உங்களுக்கு எழுதுகிறேன்.

'' ஏப்ரல்மீ 3-ந்தேதி, நாங்கள், மூன்று டாக்டர்களும், 160 சிப்பாய்களும், எரீட்ரியாவில் உள்ள ஒரு இடத்துக்குப் போகும்படி கட்டளையிடப்பட்டோம். அப்போது அஸ்மாராவைப் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத் துருப்புகள் பிடித்துவிட்டன. ஆனால் மசாவா இன்னும் கைப்பற்றப்படவில்லை. எங்களுடைய படையின் தளகர்த்தர் எங்களுடன் வந்தார். இந்தியக் கப்பற்படையைச் சேர்ந்த ஒரு கப்பலில் பிரயாணம் செய்தோம். கால நிலை ரம்மியமாயிருந்தது, ஆனால் இரவில் அலைகள் மோதுவதால் கப்பல் இங்குமங்கும் ஆடிக்கொண்டேயிருந்தது. அதனால் சில சிப்பாய்களுக்கு மயக்கமும், வாந்தியும் உண்டாயிற்று. ஆனால் யாதொரு தீங்கும் நேரவில்லை.

'' குறிப்பிட்ட இடத்தை நாங்கள் 6-ந்தேதி அடைந்தோம். அது ஒரு பாலைவனத்தில் இருந்தது. எங்குபார்த்தாலும் மணற்காடு. 30 மைல் சுற்றளவில் தண்ணீர் என்பதே கிடையாது. அந்த இடத்துக்கும் மசாவாவுக்கும் சுமார் 58 மைல் தூரம் இருந்தது. தொழிலாள சிப்பாய்கள், ஏராளமான உணவுப் பொருள்கள், வெடிகுண்டு சாமான்கள் முதலியவற்றை கப்பலிலிருந்து இறக்க வேண்டியிருந்தது. அது மிகவும் கஷ்டமான வேலை; அதிக அவசரமாகச் செய்யவேண்டிய வேலை. ஆகையால் கஷ்டப்பட்டு கூடிய சீக்கிரம் சாமான்கள் இறக்கப்பட்டன. அந்தப் பிரதேசத்தில் தண்ணீர் அகப்படாதாகையால், கப்பலிலிருந்து சர்க்கரைத் தண்ணீர் கொண்டுவந்து குடித்தோம். எதற்கும் முன்ஜாக்கிரதையாக, 30 மைலுக்கப்பால் தண்ணீர் இருக்கும் இடத்தில் 80 சிப்பாய்களும், ஒரு டாக்டரும் அனுப்பப்பட்டார்கள். 8-ந்தேதியன்று எங்களுடைய படையின் தளகர்த்தர் திடீரென்று ராணுவத் தலைமைக் காரியாலயத்துக்கு அழைக்கப்பட்டார்.

#### தண்ணீரின் அருமை.

'' சிப்பாய்கள் வேலை செய்துகொண்டு வந்தார்கள். எங்களுக்கு ஒரு நாளைக்கு ஒரு 'காலன்' தண்ணீர்தான் குடிப்பதற்குக் கொடுப்பார்கள். அப்போதுதான் முதல்முதலாக தண்ணீரினுடைய அருமை எனக்குத் தெரிந்தது. 9-ந்தேதி மசாவை நமது துருப்புகள் கைப்பற்றிய செய்தியைக் கேட்டோம். அதே சமயத்தில் கப்பல் போகும் வழியில் கடல் வெடிகுண்டுகளை எதிரிகள் மிதக்கவிட்டிருப்பதாகவும், நம்முடைய கப்பல்கள் அவைகளைச் சுட்டு அகற்றுவதாகவும் அறிந்தோம்.

'' 13-ந் தேதி 30 மைலுக்கப்பால் தண்ணீர் முனையிலுள்ள 80 சிப்பாய்களையும் ஒரு டாக்டரையும் அழைத்து வருவதற்காக நான் போனேன். நான் ஐந்து 'மோட்டார் லாரி'களைக் கொண்டு சென்றேன். வழி நெடுகவும் மணற்காடாக இருந்தது. நிழலென்பதே கிடையாது. போகிற வழியில் சில மான்களையும், முயல்களையும் கண்டோம். தண்ணீர் முனைக்கு ஒரு மைல் தூரத்தில், எரீட்ரியர்களுடைய கிராமமொன்று இருந்தது. நாங்கள் எங்களுடைய 'லாரி'களை அங்கே நிறுத்தினோம். அவைகளைக் கண்டதும், அங்குள்ள ஜனங்களெல்லோரும் தங்களுடைய குடிசைகளுக்குள் ஓடி ஒளிந்துக்கொண்டார்கள். ஒரு டம்ளர் தண்ணீர் வேண்டுமென்று அங்குள்ள ஒரு மனிதனைக் கேட்டேன்; அவனுக்கு ஒரு சிகரெட்டு கொடுத்து, அவனிடம் கைகுலுக்கினேன். கொஞ்சம் கற்றுக்கொண்ட அராபி பாஷையில் அவனைச் சில கேள்விகள் கேட்டேன்.

'' நமது துருப்புகளுக்கும், இத்தாலியத் துருப்புகளுக்கும் மிகுந்த வித்தியாசம் இருக்கிறதென்றும், இத்தாலியச் சிப்பாய்கள் எப்போது வந்தாலும், கிராமங்களில் வீட்டிற்குள் புகுந்து, பெண்களை மானபங்கம் செய்வார்களென்றும், அதனால்தான் கிராம மக்கள் துருப்புகள் வருவதைக்கண்ட உடனே ஓடி ஒளிந்து கொண்டார்களென்றும், அவன் சொன்னான். அவன் கூறியதை நான் அப்போது நம்பவேயில்லை. ஆனால் மசாவுக்குப்போன பிறகு அவன் கூறியதெல்லாம் உண்மை என்று அறிந்தேன். எந்த நாகரிகமடைந்த தேசமும், தன்னுடைய ஆதிக்கத்தின் கீழுள்ள குடிகளின் பெண் மக்களைக் கற்பழிக்காது என்று நினைத்திருந்தேன். ஆகையால் அம்மனிதன் கூறியது விபரீதமாக எனக்குத் தோன்றிற்று. இந்தியப் பெண்களை, பிரிட்டிஷ் சிப்பாய்கள் மானபங்கம் செய்வதாக நான் கேட்டதேயில்லை. ஒருக்கால் யாராவது செய்ய முயற்சித்தால், அவன் பிரிட்டிஷாரால் கடுமையாகத் தண்டிக்கப்படுவான் என்பது தெரிந்த விஷயம்.

#### மசாவா மக்கள் நிலைமை

'' ஏப்ரல்மீ 20-ந் தேதி, 'மோட்டார் லாரி' களில் மசாவாவுக்குப் பயணப்பட்டோம். காலை 9½ மணிக்குப் புறப்பட்டு, மத்தியானம் 1 மணிக்குப் போய்ச் சேர்ந்தோம். மசாவா அழகாகக் கட்டப்பட்ட ஒரு பட்டணம். அங்கு ஏராளமான இத்தாலியக் கைதிகள் இருந்தார்கள். சிப்பாய்கள் வசிக்கும் அறைகளில் காற்றோட்டமாக இருப்பவை எங்களுக்குக்

கொடுக்கப்பட்டன. குடிப்பதற்கு வேண்டிய தண்ணீர் இருந்தது. நாங்கள் மிகவும் சந்தோஷமாய் இருந்தோம்.

“தெருக்களில் சரியான ஆடையில்லாமல் கிராமத்தார்களில் சிலர் இங்குமங்கும் போய்க்கொண்டிருந்தார்கள். அவர்களுடைய ஆடை கிழிந்து கந்தல் கந்தலாய் இருந்தது. பெண்கள் இடையிலும் மார்பிலும் ஒரு சிறு துணிதான் அணிந்திருந்தார்கள். அவர்கள் நாகரிகமற்ற பிற்போக்கான மக்கள் என்று நான் நினைத்தேன்.

# இராக்கில் நடந்த இரண்டு சம்பவங்கள்

## ருசிகரமான ரயில் சண்டை விவரம்

## புரட்சிக்காரர்களின் பேரீச்சம்பழத் தீவு

இராக்கில் நடந்த சண்டையைப்பற்றிய பல விவரங்கள் இப்போது வெளி வந்திருக்கின்றன. புரட்சிக்காரர்கள் அதிகமில்லை; அவர்களுக்குச் சரியான ஆயுதங்கள் கிடையாது; இருந்தபோதிலும் அவர்களுடன் போர் புரிவது கஷ்டமான வேலையாயிருந்தது. பிரிட்டிஷ் துருப்புகள், இராக் புரட்சிக்காரர்களுடைய பிரதம எதிர்ப்பை முறித்து உடைத்துவிட்டது. ஆனுல் அச்சு நாடுகளால் ஏமாற்றப்பட்ட புரட்சித் துருப்புகள் சிறு பகுதிகளாகப் பிரிந்து, குரங்குச் சண்டைத் தந்திரத்தைக் கையாண்டன. இப்படி நாள் கடத்திக்கொண்டே சென்ருல் நாஸிகளுடைய உதவி கடைசியில் வரும் என்று புரட்சிக்காரர்கள் நம்பினுர்கள். வாக்களிக்கப்பட்ட உதவி வரவேயில்லை. புரட்சிக்காரர்களோடு செய்த சண்டையில் நடந்த இரண்டு சம்பவங்களை இங்கே கூறலாம்:—

பஸ்ராவிலிருந்து சுமார் 50 மைல் தூரத்தில் ஒரு பிரிட்டிஷ் ஆகாய விமானம் பறக்கமுடியாமல் கீழே இறங்கிவிட்டது. அதில் சில முக்கியமான காகிதங்கள் இருந்தன. அவைகளை எடுத்து வருவதற்காக ஒரு ராணுவ உத்தியோகஸ்தரும், 10 சீக்கிய சிப்பாய்களும் அனுப்பப்பட்டனர். இவர்கள் ஒரு ரயில்வே உத்தியோகஸ்தருடன் ஒரு சிறு ரயில் வண்டியில் புறப்பட்டார்கள். ரயில் வண்டியை ஓட்டுவதற்கு யாருக்கும் தெரியாது. ஒரு நல்ல ஏற்பாடு செய்யப்பட்டது. ரயில் வண்டியை ஓட்டும் விதிகளை ராணுவ உத்தியோகஸ்தர் படிப்பது; ரயில் உத்தியோகஸ்தர் அதன்படி யந்திர விசைகளைத் திருப்புவது. இப்படியே ரயில் புறப்பட்டுப் போயிற்று. இரண்டு ஸ்டேஷன்களைத் தாண்டிவிட்டு, மெதுவாகப் போய்க்கொண்டிருக்கும்போது, வழியில் இரண்டு வ டிகளையுடைய யுத்த தளவாடம் அமைந்த ஒரு ரயில் நின்றுகொண்டிருந்தது. அப்போது நடுமத்தியான வேளை. அந்த ரயிலைக்கைப்பற்றலாமாஎன்று யோசனை செய்துகொண்டிருக்கும்போது, அது சின்ன ரயிலை நோக்கிவர ஆரம்பித்தது. சின்ன ரயில் பின்பக்கமாகவே ஓட ஆரம்பித்தது. அதிகதூரம் ஓடின பிறகு தண்ணீர் இல்லாமையால் சின்ன ரயில் நின்று போய்விட்டது.

அந்த இடத்தில் ஒரு சிறு பாலம் இருந்தது. பாலத்திற்கடியில் சீக்கிய சிப்பாய்கள் ஒளிந்துகொண்டார்கள். பெரிய ரயில் பாலத்தின்மேல் வந்ததும் சுடவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. 100 கஜ தூரத்தில் வரும்போதே ரயில் உத்தியோகஸ்தர் தன்னுடைய கொடியைக்காட்டி எதிரிகளின் ரயிலை நிறுத்திவிட்டார். அவரைப் பிடிப்பதற்காக, புரட்சிக்காரர்கள் ரயிலிலிருந்து கீழே இறங்குவார்கள்; அப்போது சீக்கியர்கள் அவர்களை நோக்கிச்சுடவேண்டும் என்று திட்டம்போடப்பட்டது. அத்திட்டம் நிறைவேறவில்லை. ரயில்வே உத்தியோகஸ்தரை திடீரென்று பிடித்து இழுத்து முதல் வண்டிக்குள் போட்டுக்கொண்டு கதவுகளை எல்லாம் மூடிவிட்டார்கள்.

கொஞ்சநேரங்கழித்து, ரயில் வண்டி பாலத்தின் மேல் வந்தது. சீக்கியர்கள் வண்டியை நோக்கிச் சுட்டார்கள், புரட்சிக்காரர்கள் சீக்கியர்களைப் பார்த்துச் சுட்டார்கள். பிறகு ரயில் பாலத்தின்மேல் வருவது, பின்பு பின்னுல் போவது, மறுபடியும் பாலத்தின் மேல் வருவது—இப்படியாக, போவதும் வருவதுமாய் இருந்தது. கடைசியில் பார்த்தால் பிரிட்டிஷ் துருப்புகளைச் சேர்ந்த ரயில்வே உத்தியோகஸ்தர் அந்த ரயில் வண்டி ஓட்டுபவனைத் தாக்கி ஒடுக்கிவிட்டு, வண்டியை இங்குமங்குமாக ஓட்டிக்கொண்டிருந்தார். சீக்கியர்கள் பின் வண்டியிலுள்ள புரட்சிக்காரர்களைச் சுட்டுத்தாக்குவதற்காக அவர் அப்படிச் செய்தார், மெதுவாக நகர்ந்து மறைந்து முடிவில் சீக்கியர்கள் ரயில் வண்டியில் ஏறிவிட்டார்கள். எதிரிலிருக்கும் வண்டியைத் தள்ளிக்கொண்டு ரயில் பஸ்ராவுக்குப் புறப்பட்டது. வழிநெடுக, துப்பாக்கிச் சண்டை நடந்துகொண்டு வந்தது.

### தப்பித்துக்கொண்டார்கள்.

ரயில் வண்டி கடைசியில் பஸ்ராவைப் போய்ச்சேர்ந்தது. ஒரு யுத்த முஸ்தீப்பு ரயிலைக் கைப்பற்றியதாக ராணுவத்தலைவருக்கு அறிவிக்கப்பட்டது. ஆனுல் ரயில் வண்டியில் ஒரு புரட்சிக்காரன்கூட அகப்படவேயில்லை. ஒன்றன் பின்னென்ருக, ரயிலிலிருந்து குதித்து அவர்களெல்லோரும் தப்பித்துக்கொண்டு ஓடிவிட்டார்கள்!

இராக்கின் புரட்சிக்காரர்கள் நம்முடைய தளங்களுக்குச் சில மைல் தூரத்திலிருந்து வந்து போர் புரிந்து கொண்டிருந்தார்கள். அவர்களுடைய தலைமை ஸ்தானத்தைச்சுற்றி டைகிரிஸ் நதித்தண்ணீர் ஒரு பெரிய ஏரியாக அமைந்திருந்தது. புரட்சிக்காரர்களின் மறைவிடப்பிரதேசத்தில் நிறைய பேரீச்சமரங்கள் இருந்தன. மிகக் குறுகிய பாதை புரட்சிக்காரர்களுடைய இடத்துக்கு ஒரே வழியாக இருந்தது. அந்த வழியின் இருபக்கத்திலும் சதுப்பு நிலமிருந்ததால், தெரியாமல் போகிறவர்கள் சேற்றில் அகப்பட்டுக்கொள்ளும்படியாயிருந்தது.

“புரட்சிக்காரர்கள் பகலெல்லாம் அந்த இடத்தில் ஒளிந்திருப்பார்கள்; இரவானதும் வந்து எங்களைத் தாக்குவார்கள். இப்படி அடிக்கடி அவர்கள் தொந்தரவு செய்துகொண்டுவந்ததால், அவர்களை அங்கிருந்து விலக்கிவிடவேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது. அந்த வேலை சில கூர்க்கர்களுக்குக் கொடுக்கப்பட்டது. ஒரே சமயத்தில் தரை வழியாகவும், தண்ணீர் வழியாகவும் தாக்கும்படி ஏற்பாடாயிற்று.

### இரண்டு படை ஒரே சமயத்தில் தாக்குதல்.

“இரவு பத்து மணியிருக்கும். எங்களுடைய துருப்புகள் ஒரு பீரங்கிக்கப்பலிலும், சில படகுகளிலும் ஏறிக்கொண்டு, சப்தம் செய்யாமல் ஆற்றில் சென்றன. தரைப்படை குறுகிய பாதையை நோக்கிச் சென்றது. பொழுது விடியுமுன், தரைப்படை புரட்சிக்காரர்கள் ஒளிந்துகொண்டிருந்த பேரீச்சமரத் தோப்பை நெருங்கி இருந்தது.

“திடீரென்று கப்பலிலிருந்து 4 அங்குல பீரங்கிகள் சுட ஆரம்பித்தன. புரட்சிக்காரர்கள் திடுக்கிட்டுப் பிரமித்தார்கள். உடனே தரைப் படைக்காரர்களும் சுட ஆரம்பித்தார்கள். அவர்கள் சுட்டுக்கொண்டே இருக்கும்போது, கப்பலில் வந்த சிப்பாய்கள் கரையேறினுர்கள். தரைப்படையும், கப்பற்படையும், ஒரே சமயத்தில் தாக்கின. புரட்சிக்காரர்களுடைய எதிர்ப்பு விரைவில் கைவிடப்பட்டது.

“பொழுது விடிந்தது. புரட்சிக்காரர்கள் நாலா பக்கங்களிலும் ஓடி ஒளிய ஆரம்பித்தார்கள். அநேகர் படகுகளில் ஏறிக்கொண்டு நாணல்கள் நிறைந்த இடங்களில் ஒளிந்துகொண்டார்கள். ஆனுல் பீரங்கிக்கப்பல் அவர்களைக் கவனித்தது. சிலர் இரகசியப் பாதைகளின் வழியாக ஓடி, சதுப்பு நிலப்பிரதேசங்களில் ஒளிந்து கொண்டார்கள். ஆனுல், நமது துருப்புகள் அவர்களைத் துரத்திக்கொண்டுபோய் அவர்களை நாசப்படுத்தினுர்கள். பலர் சதுப்பு நிலத்தில் விழுந்து சேற்றில் மூழ்கி இறந்து போனுர்கள்.

“மூன்று மணி நேரத்தில், புரட்சிக்காரர்களுடைய குகை கைப்பற்றப்பட்டது இராக்கின் கலகக்காரர்கள் அழிக்கப்பட்டார்கள். நம்முடைய துருப்புகள் கைப்பற்றப்பட்ட பேரீச்சம் பழம், கைதிகள், யுத்த சாமான்கள் இவைகளுடன் திரும்பி வந்து சேர்ந்தார்கள்.”

“கயிற்றுவழி ஸ்டேஷனுக்கெதிரில் நாங்கள் வசித்து வந்தோம். அந்த ஸ்டேஷனில் வேலை செய்யும், ராணுவ சம்பந்தமில்லாத சில இத்தாலியர்களும், சில சுதேசிக் கைதிகளும் வசித்தார்கள். அந்த இத்தாலியர்களுள் ஒருவர் ஒரு காயத்தைக் கட்டுகட்டிக் கொள்வதற்காக என்னிடம் வந்தார்.

அவருக்குக் கொஞ்சம் ஆங்கில பாஷை பேசத் தெரியும். அந்த ஊர் சுதேசிகளைப்பற்றி அவரிடம் கேட்டேன். இத்தாலியர்களுடைய உத்தரவில்லாமல், சுதேசிகள் யாரும் ஊருக்குள் வரக்கூடாதென்றும், அப்படி யாராவது வந்தால் அவர்கள் சுடப்படுவது சகஜமென்றும் அவர் கூறினார். இதைக்கேட்டு நான் திடுக்கிட்டேன்.

### வித்தியாசமான பட்டாளங்கள்

இத்தாலியர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட சாமான்களில், துப்பாக்கிகளும், வெடிகுண்டு மருந்து வகையராக்களும், தின்பண்டங்களும் ஏராளமாய் இருந்தன. இவைகளெல்லாம் பார்த்தபிறகு, இத்தாலியர்களுடைய சுதேசித் துருப்புகளைப் பார்க்க எனக்கு மிகவும் ஆச்சரியமாயிருந்தது. எரீட்ரிய சிப்பாய்களுக்குச் சரியான ராணுவ உடுப்பு கொடுக்கப்படவில்லை. சில சிப்பாய்களுக்கு 'பூட்சு' கிடையாது, சிலருக்கு 'ஷர்ட்'டுகள் இல்லை; இத்தாலியர்களுக்குக் கொடுக்கப்பட்ட துப்பாக்கிகள் வேறு, சுதேசிகளுக்குக் கொடுக்கப்பட்ட துப்பாக்சிகள் வேறு. சுதேசிகளுக்குக் கொடுக்கப்பட்ட துப்பாக்கிகள் சுமார் 100 வருஷங்களுக்கு முன் உபயோகிக்கப்பட்ட துப்பாக்கிகள். சுதேசித் துருப்புகளுக்கு, சுதேசி ராணுவ உத்தியோகஸ்தர் கிடையாது; சுமார் 500 சுதேசி சிப்பாய்கள் சாதாரண இத்தாலிய சிப்பாயின் தலைமையின்கீழ் இருந்தார்கள். இந்தியப் பட்டாளத்துக்கும், எரீட்ரியப்பட்டாளத்துக்கும் இருந்த பெரிய வித்தியாசம் இதனால் எனக்கு தெரிந்தது.

"ஒரு நாள் நாங்கள் இருந்த முகாமுக்கு ஒரு கண்குருடானவன் வந்தான். அவனுக்கு இந்துஸ்தானி பேசத்தெரியும். சுதேச மக்களை எவ்வளவு கொடுமையாக இத்தாலியர்கள் நடத்திவந்தார்கள் என்பதைப்பற்றி என்னிடம் அவன் விரிவாகக்கூறினான். யுத்தம் ஆரம்பித்தபோது, ஒரு மதுபான சாலையில் அவன் வேலைசெய்து கொண்டிருந்தான். இத்தாலியர்கள் அவன் கையில் ஒரு துப்பாக்கியைக் கொடுத்து சண்டைக்கு அனுப்பிவிட்டார்களாம். இத்தாலிய 'சார்ஜண்டுகள்' மகாகொடியவர்களென்றும், ஒரு 'சார்ஜண்ட்' கல்லையெடுத்து அடித்ததாகவும், அதனால் ஒரு கண்குருடாய்ப் போய்விட்டதாகவும் அவன் சொன்னான்.

"எரீட்ரியாவில் இத்தாலியர்கள் காட்டிய நாகரிகமும், நீதிநெறியும் இதுதான்!

"இத்தாலிய சிப்பாய்கள் எரீட்ரியாவில் இன்னும் அதிகமாகச் செய்த அக்கிரமங்களைப்பற்றி அவன் விவரித்துக் கூறினான். இத்தாலிய சிப்பாய்கள் எந்த வீட்டுக்குள் வேண்டுமென்றாலும் நுழையலாம்; எந்தப் பெண்ணையும் கைப்பற்றிக்கொண்டு போகலாம்; மானபங்கம் செய்யலாம். பெற்றோர்கள் யாராவது ஆட்சேபனை செய்தால், அவர்கள் அடித்துக்கொல்லப்படுவார்கள். யாராவது கோர்ட்டில் பிராது செய்தால், "ஒரு இத்தாலியன் உன்னுடைய மகள் அல்லது சகோதரியின்மேல் ஆசைப்படுவது உனக்குப் பெருமையல்லவா?" என்று ஜட்ஜி சொல்வாராம்! இப்படிப்பட்ட நியாயாதிபதிகள் தான் அங்கு நீதிவழங்குபவர்கள். 16 வயது பெண்கள் கிரா. வியாதிகளால் வருந்துவதை நானே கண்டேன். அவர்களுக்கு யாதொரு வைத்திய சிகிச்சையும் கொடுக்கப்படுவதில்லை.

### இத்தாலிய நாகரிகத்தின் போக்கு.

"ஆனால் இப்போது, பிரிட்டிஷார் சுதேசி மக்களுக்காக அநேக ஆஸ்பத்திரிகள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். இருந்தபோதிலும், இப்போதிருக்கும் நிலைமையைப் பார்த்தால், இந்தக் கொடூர வியாதிகளின் கெடுதல்களை அடக்குவதற்கு அநேக வருஷங்கள் செல்லும்போலிருக்கிறது. ஜூலியஸ் சீசருடைய சந்ததியில் வந்த நாகரிகத்தின்போக்கு, எரீட்ரியாவில், இத்தாலியர்களுடைய 40 வருஷ ஆட்சிக்குப் பிறகு இம்மாதிரி இருப்பதை நான் கண்டேன்.

"அப்போது, முசலோனி அபிசீனியாவை ஜெயிப்பதற்கு முன் கூறிய வார்த்தைகள் என் நினைவுக்கு வந்தன. 'அபிசீனியாவிலுள்ள காட்டுமிராண்டி ஜனங்களை நாகரிகமாக்கப் போகிறேன்" என்று முசலோனி கூறினார். எரீட்ரியாவுக்கு இத்தாலியர்கள் கொண்டுவந்த நாகரிகத்தைப்போல், அபிசீனியாவுக்கும் கொண்டுபோயிருந்தால், கடவுள்தான் அபிசீனியர்களைக் காப்பாற்றவேண்டும்!

"எரீட்ரியாவில் தான் முதல் முதல், பிரிட்டிஷ் ஆட்சிக்கும் இத்தாலிய ஆட்சிக்கும் உள்ள வித்தியாசங்களை உணர்ந்தேன். இந்தியாவில் பிரிட்டிஷார் எத்தனையோ வருஷங்களாக இருந்துவருகிறார்கள்; ஆனால் நம்நாட்டுப் பெண்மக்களை மானபங்கம் செய்ய முயன்றதே கிடையாது. இந்தியர்கள் சுயமரியாதை உடையவர்கள். இந்தியன் என்ற முறையில், நான் அதை மிகப்பெருமையோடு கூறுகிறேன்.

### பிரிட்டிஷ் ஆட்சியின் ஒழுக்கம்.

"பிரிட்டிஷாரைவிட இத்தாலியர்களாவது, ஜெர்மானியர்களாவது சிறந்த ஒழுக்கமுடையவர்கள் என்று இந்தியர்களாகிய நாம் எந்தக் காலத்திலும் நம்பக்கூடாது. அவர்களை நான் மனமார வெறுக்கிறேன். அவர்களுடைய அக்கிரமங்களையும், கொடூரங்களையும் நான் என் கண்ணால் கண்டேன். இந்தியர்கள் சுயமரியாதையுள்ளவர்களாயிருந்தால், பிரிட்டிஷாரை விட்டு வேறு தேசத்தினரை எந்தக்காலத்திலும் விரும்பமாட்டாகள். மனிதத் தன்மையின் பேரினாலும், நாகரிகத்தின் பேரினாலும் இத்தாலியர்கள் எரீட்ரியாவைக் கைப்பற்றினார்கள். ஆனால், பட்டினி, மானபங்கம், துன்மார்க்கம், இவைகளைத் தான் இந்த நாட்டுக்குக் கொடுத்தார்கள். இங்கு உணவின் விலையைவிட பெண்ணின் விலை மிகவும் நயமானது.

"முடிவாக, நம் நாட்டு மக்களுக்கு நான் ஒரு வார்த்தைகூற விரும்புகிறேன். ஆங்கில நாகரிகத்தைவிட இத்தாலிய நாகரிகம் சிறந்தது என்று எந்த இந்தியராவது சொன்னால், அவரை எரீட்ரியாவுக்கு வந்து நேரில் பார்க்கும்படி நான் அழைக்கிறேன். முசலோனியின் பிரசங்கங்களைப் படித்து அறியாமையினால் யாரும் மயங்கிவிடக்கூடாது. முசலோனி தன்னுடைய நாட்டு யுத்த முஸ்தீப்பை மாற்றினாரே ஒழிய, காமமும் காட்டுமிராண்டித்தனமும் நிறைந்த இத்தாலியர்களுடைய மனப்பான்மையை மாற்றவில்லை. 'பெட்ரோலும்', யந்திரமும் ஒரு நாட்டின் மேன்மையைக் காண்பிக்கமாட்டா; ராணுவத்தின் ஒழுங்குமுறையும், மக்களின் நீதிநெறியும் தான் ஒரு நாட்டின் உயர்ந்த தன்மைக்கு அடையாளம்."

---

## தற்போதுள்ள யுத்த நிலைமை.

### எதிரியின் பலமும், நமது பலமும்: மிஸ்டர் சர்ச்சில் பேச்சு.

யுத்த ஆயுத சாமான்கள் உற்பத்தி சம்பந்தமாக, காமன்ஸ் சபையில், மிஸ்டர் சர்ச்சில் சென்ற செவ்வாய்க்கிழமை பேசினார். அவர் பேசியதன் சாராம்சமாவது :—

1. எதேச்சாதிகார நாடாக பிரிட்டன் இல்லாவிட்டாலும், நாட்டு மக்கள் அனைவரும் யுத்தத்தில் ஒரே நோக்கத்துடன் இருக்கிறார்கள்.
2. யுத்த உற்பத்தி எல்லாத் துறைகளிலும் துரிதமாக அதிகப்பட்டுக்கொண்டுவருகிறது.
3. புது மாதிரியான ஆகாய விமானங்கள் சென்ற வருஷத்தைவிட இந்த வருஷம் ஜெர்மனியைவிட அதிகமாக செய்யப்பட்டன.
4. பீரங்கிகள், வெடிகுண்டு சாமான்கள், வர்த்தகக் கப்பல்கள், யுத்தக் கப்பல்கள் அதிகமாகச் செய்யப்படுகின்றன.
5. பிரிட்டன் அதிவேகமுள்ள வெடிகுண்டு விமானங்கள் அதிகமாகச் செய்து வருகிறது.
6. பிரிட்டனில் இந்த வருஷம் பயிர் விளைவு அதிகம்.
7. சென்ற யுத்தத்தில் இருந்ததைவிட யுத்த ஆயுத பண்டகசாலைச் சாமான்கள் இப்போது மிக அதிகமாய் இருக்கின்றன.
8. பிரிட்டனில் எந்தப் பாகத்திலும், தொழிலாளர் வேலை நிறுத்தமே கிடையாது.

இதுவரைக்கும் ஏற்பட்ட லாபங்களைப்பற்றி, மிஸ்டர் சர்ச்சில் குறிப்பிட்டார். அவர் குறிப்பிட்டதாவது :—

1. ரஷ்யா ஜெர்மன் படைகளைத் திருப்பித் தாக்கி ஏராளமான சேதத்தை உண்டாக்கியிருக்கிறது. 2. அமெரிக்காவினுடைய உதவி அதிகப்பட்டுக்கொண்டே வருகிறது. 3. ஜெர்மனியின் ஆகாய விமான பலம் குறைக்கப்பட்டிருக்கிறது. 4. அமெரிக்காவினுடைய உதவியினால், அட்லாண்டிக் கடல் யுத்தம் நேசதேசத்தார்களுக்கு அனுகூலமாக நடந்துவருகிறது. 5. எகிப்தில் நைல் நதிக்கரைப் பள்ளத்தாக்கு இரண்டு

## பிரிட்டனில் இந்திய சிப்பாய்கள்.



இந்திய துப்பாக்கி பட்டாளத்தைச்சேர்ந்த ஒரு ஆபிஸர் வட ஆபிரிக்காவின் மேற்கு பாலைவனத்தில் விரோதிகளின் நடமாட்டத்தைக் கூர்ந்து கவனிப்பதைப் படத்தில் காணலாம்.

மூன்று மாதங்களுக்குமுன் இருந்ததைவிட இப்போது தகுந்த பாதுகாப்பில் இருக்கிறது. 6. ஜெர்மனி கொள்கைப் பெருமையை இழந்து, ஒழுங்கீனமான நிலைமையை அடைந்து, அறிவுலகத்தில் சீர்கேடுற்றிருக்கிறது.

ஜெர்மனி பிரிட்டனை மறுபடியும் தாக்கினால், அதற்குத் தயாராக இருக்கவேண்டுமென்று மிஸ்டர் சர்ச்சில் எச்சரிக்கை செய்தார். அவர் குறிப்பிட்டதாவது :— 1. ஜெர்மனியினுடைய பலம் இன்னும் பெரிதாகத்தான் இருக்கிறது. 2. வெடிகுண்டு சாமான்கள் கைப்பற்றியும், தானே செய்தும், அதிகமாக ஜெர்மனி வைத்திருக்கிறது. 3. ஜெர்மனியின் யுத்த உற்பத்தி அதிகமாயிருக்கிறது. 4. அதிக்கிரமித்த நாடுகளில் உள்ள மக்களின் தற்கால நிலைமை ஜெர்மனிக்கு அனுகூலமாக இருக்கிறது. 5. அநேக நாட்டுப் பொருள்களும், சாமான்களும் ஜெர்மனிக்குக் கிடைக்கின்றன.

தன்னுடைய பேச்சு முடிவில், மிஸ்டர் சர்ச்சில் கூறியதாவது :—"ஒரு வருஷத்துக்கு மேலாக நாம் மனிதவர்க்கத்தின் பொக்கிஷமான சுதந்தரத்தைப் பாதுகாக்கப் போராடி வருகிறோம். இப்போதுள்ள நிலைமையில் சந்தோஷகரமான மாறுதல்கள் ஏற்பட்டிருந்தாலும், நம்முடைய பொறுப்பு மாத்திரம் குறையாமல் இருக்கிறது. பொது லட்சியத்திற்காக, நம்முடைய முழுபலத்தையும் கொடுத்து, நமது கடைசி துளி ரத்தத்தையும் சிந்த நாம் தயாராயிருக்கிறோம்."

## ஆப்பிரிக்கா யுத்தம் : இந்தியப் பட்டாளத்தின் சொற்ப நஷ்டம்.

ஆப்பிரிக்காவில் நடந்த யுத்தத்தில் இந்தியப் பட்டாளங்களில் டிசம்பர் மாதத்திலிருந்து ஜூலை மாதம் 8-ந் தேதி வரைக்கும் காயப்பட்டவர்களின் தொகை 6,427. இதில் சிலர் இறந்துபோனார்கள். முதல் மேற்குப் பாலைவன யுத்தம், சூடான் யுத்தம், எரீட்ரியா யுத்தம் இவைகளில் இந்தியப் படைகளால் தாக்கப்பட்டு இறந்துபோன எதிரிகள் 213,000. 1914–18 யுத்தத்தில் மெசபொடேமியா சண்டையில் காயம்பட்டு அல்லது இறந்த சிப்பாய்கள் மொத்தம் 13,812. டிசம்பர் 1940-லிருந்து ஜூலை 8, 1941 வரைக்கும், எகிப்து, லிபியா, சூடான், எரீட்ரியா, பிரதேச யுத்தங்களில் பாதிக்கப்பட்ட இந்தியத் துருப்புகள் கணக்கு பின்வருமாறு :—

உத்தியோகஸ்தர்கள் :—கொல்லப்பட்டவர்கள் 21 ; காயப்பட்டவர்கள் 96 ; காணாமற்போனவர்கள் 17 ; யுத்தக் கைதிகள் 14.

வி. சி. ஓ. ஆபீசர்கள் :—கொல்லப்பட்டவர்கள் 26 ; காயப்பட்டவர்கள் 101 ; காணாமற்போனவர்கள் 35.

ஐ. ஓ. ஆர். துருப்புகள் ; கொல்லப்பட்டவர்கள் 712 ; காயப்பட்டவர்கள் 4,170 ; காணாமற்போனவர்கள் 1,209 ; யுத்தக் கைதிகள் 26.

மொத்தம் ;—கொல்லப்பட்டவர்கள் 759 ; காயப்பட்டவர்கள் 4,367 ; காணாமற்போனவர்கள் 1,251 ; யுத்தக் கைதிகள் 46.

## பிரிட்டனுக்கு அமெரிக்க உதவி.

சென்ற ஞாயிற்றுக்கிழமை, பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட் அனுப்பிய தூதரான மிஸ்டர் ஹாரி ஹாப்கின்ஸ், பிரிட்டனுக்கு அமெரிக்கா செய்யும் உதவியைப்பற்றிக் கூறியதாவது :—

(1) ஆயிரக்கணக்காக அமெரிக்க விமானங்கள் செய்யப்பட்டு, பிரிட்டனுக்கு அனுப்பப்படுகின்றன.

(2) அநேக நூற்றுக்கணக்கான டாங்கிகள் பிரிட்டனுக்கு அனுப்பப்பட்டன ; மேலும் அனுப்பப்பட்டுவருகின்றன.

(3) அநேக அமெரிக்க வர்த்தகக் கப்பல்கள் பிரிட்டனுக்கு மாற்றப்பட்டன.

(4) அமெரிக்காவில் செய்யப்பட்ட யந்திர சாமான்கள் பிரிட்டிஷ் தொழிற்சாலையில் உபயோகிக்கப்படுகின்றன.

(5) ஏராளமான உணவுப் பொருள்கள் பிரிட்டனுக்கு அனுப்பப்படும்.

(6) வேறு இதர சாமான்கள், யுத்தத்திற்கு உபயோகப்படக்கூடியவை, அதிகமாக அனுப்பப்படுகின்றன.

அமெரிக்காவின் நட்புப் பாலம் வாஷிங்டனிலிருந்து லண்டன் வரைக்கும் இருக்கிறதென்று மிஸ்டர் ஹாப்கின்ஸ் கூறினார்.

# வாரச் செய்திக் குறிப்புகள்.

### 1. ஜெர்மனியிலும், பிரிட்டனிலும், இதர இடங்களிலும் ஆகாய விமானப் போர்.

பிரிட்டிஷ் ஆகாய விமானப்படை மேற்கு ஜெர்மனியில் முக்கியமான லட்சியங்களின் மேலும், ஜெர்மனியின் தலை நகரத்தின் மேலும், பிரான்சின் மேலும் வெடி குண்டுகளைப்போட்டு, சேதத்தை உண்டாக்கியது என்று சென்ற வாரத்திய செய்திகள் கூறுகின்றன.

ஹாஹேவர், ஆஸ்டெண்டு, இந்த இரண்டு பட்டணங்களின் கப்பற்சாலைகள், பிராங்போர்ட், மான்ஹீம்

இந்த இரண்டு நகரங்களின் தொழிற்சாலைப் பிரதேசங்கள், ஹனோவர், ஹாம்பர்க், வடக்கு பிரான்சு, நார்வேயின் கடற்கரைப் பிரதேசம் முதலியவைகள் பிரிட்டிஷ் வெடிகுண்டுகளால் தாக்கப்பட்டன.

பர்லின் கடுமையாகத் தாக்கப்பட்டது. மிகப் பளுவானதும், கடுமையானதுமான வெடிகுண்டுகள் போடப்பட்டன. நகர மத்தியில் வெடி குண்டுகள் வெடித்தன. பர்லின் ரேடியோ இந்தத் தாக்குதல் நடந்ததாக ஒப்புக்கொள்ளுகிறது. பர்லின் நகர மக்கள் இன்னும் கடுமையான விமானத் தாக்குதல்களை எதிர் பார்த்து பயந்திருக்கிறார்கள் என்று ஜெர்மனியிலிருந்து வந்த நடு நிலைமைநாட்டுப் பிரமுகர் லிஸ்பன் (ஸ்பெயின்) "ராய்ட்டர்" நிருபரிடம் கூறினார். மழைக்காலத்தில், இரவு நீண்டிருக்கும்போது, பிரிட்டிஷ் விமானப்படை கடுமையாகத் தாக்குமென்பதும், அடுத்த வருஷம் உணவுப்பொருள் கட்டாயம் குறைந்து போவதால் கஷ்டம் ஏற்படுமென்பதும், ஜெர்மனியர்களுடைய இரண்டு பெரும் பயங்கள் என்று அவர் சொன்னார்.

பிரிட்டிஷ் விமானப் படையை ஏமாற்றுவதற்காக, ஒரு போலி பர்லின் நகரம் கட்டப்பட்டிருப்பதாக "டெய்லி எக்ஸ்பிரஸ்" லிஸ்பன் நிருபர் அனுப்பிய செய்தியிலிருந்து தெரிகிறது. பர்லினைப்போலவே வீடு அமைப்புகளும், தெருக்களும், ரயில் ஸ்டேஷன்களும், மிருகக் கண்காட்சிச் சாலைகளும், பல சதுரமைல் விஸ்தீரணத்தில் அமைக்கப்பட்டிருக்கின்றன. போலி பர்லினில் உள்ள வீடுகளெல்லாம் மரத்தால் செய்யப்பட்டன. அநேக மைல்கள் நீண்ட தெருக்களையும், மரக்கட்டைகளையும், வீடுகளையும், முச்சந்தி, நாற்சந்திகளையும், மிகக் கஷ்டப்பட்டுக் கட்டியிருப்பதாகத் தெரிகிறது. இந்த மாயப்பட்டணத்தில் விளக்கணைப்புத்திட்டம் அனுஷ்டிக்கப்படுகிறது என்று பிரிட்டிஷ் விமானிகளுக்குத் தெரிவதற்காக, விமான அறிவிப்பு சங்கு ஊதினதும் அங்கே மங்கலான நீல வெளிச்சம் போடப்படுகிறது.

உண்மையான பர்லினை, பிரிட்டிஷ் விமான முதல் அலைப்படை தாக்கியது. போலிப் பர்லினில் சில இடங்களில் தீப்பற்றி எரியும்படி செய்கிறார்கள். பின்னால் வரும் பிரிட்டிஷ் விமானிகள் இதைக்கண்டு, முன் சென்ற பிரிட்டிஷ் விமானங்கள் தங்கள் கடமையைச் சரியாகச் செய்துவிட்டன என்று நினைக்கவேண்டுமென்பதுதான் இதன் நோக்கம். இந்தப் போலி நகரம் போன வருஷம் கட்டப்பட்டதென்றும், இதில் சிப்பாய்களும், யந்திர வித்தை நிபுணர்களும் இருக்கிறார்களென்றும் தெரிகிறது.

உண்மையான பர்லின் நகரக் கட்டடங்களை மறைப்பதற்காக, ஜெர்மனியர்கள் சில தந்திரங்கள் செய்திருக்கிறார்கள். பர்லின் ரேடியோ நிலையமும், கண் காட்சி மைதானமும், லிட்சென்சீ என்ற ஏரிக்குப் பக்கத்தில் இருக்கின்றன. ஏரியின் தண்ணீர் ஆகாயத்திலிருந்து ஒரு அடையாளமாகத் தெரியும் என்று கருதி, ஏரி முழுவதையும் பலகையினால் மூடிவிட்டார்கள். கெய்சர்டாம் என்ற முக்கிய பாதை விமானத்திலிருந்து புலப்படும் என்ற காரணத்திற்காக, 15 அடி உயரத்தில் அப்பாதையை நூற்றுக் கணக்கான கஜ நீளமுள்ள பச்சைத் துணியால் மூடிவிட்டார்கள். பர்லினை நோக்கிச் செல்லும் பாதைகள் இரவில் பிரிட்டிஷ் விமானங்களுக்குப் புலப்படாதிருப்பதற்காக கருப்பு வர்ணம் பூசப்பட்டிருக்கின்றன.

நியூயார்க்கில் உள்ள லண்டன் "டைம்ஸ்" நிருபர் இன்னும் சில விவரங்களைக் கூறுகிறார். இந்த விவரங்கள் பர்லினில் கொஞ்சகாலம் தங்கியிருந்த கிரீசின் அமெரிக்க ஸ்தானீகர், மிஸ்டர் லிங்கன் மாக்வீ கூறியவையாகும். பிரிட்டிஷ் விமானிகள் நன்றாகக் குறி பார்த்து வெடி குண்டுகள் போடுவதால், ஜெர்மானியர்கள் தங்கள் கட்டடங்களை மறைப்பதற்கு அதிக பிரயாசை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்று அவர் கூறினார். உயர்ந்த கட்டடங்கள் மேல் பெரிதாய் வளர்ந்த மரங்களை நட்டு வளர்க்கிறார்களாம். சைகிள் பாதைகளும், தோட்டங்களில் உள்ள வண்டிப் பாதைகளும் பச்சை வர்ணம் பூசப்பட்டிருக்கின்றன. குளம், குட்டை, ஏரிகள் முதலியவை நிலா வெளிச்சத்தில் மேலே புலப்படாதபடி, பெரிய வலையினால் மூடப்படுகின்றன. சில ஏரிகளில் பெரிய புல் தீவுகளை மிதக்க விட்டிருக்கிறார்கள், இப்படி யெல்லாம் செய்தும், பிரிட்டிஷ் விமானிகள் குறிபார்த்து வெடி குண்டுகளைப் போட்டு, பலத்த சேதத்தை உண்டாக்கி வருகிறார்களென்று மிஸ்டர் மாக்வீ கூறினார்.

ஜெர்மன் எல்லையிலுள்ள "டெய்லி டெலிகிராப்" நிருபர் கூறும் விவரமாவது :—ஹாம்பர்க், ஹனோவர், பிரெமென் இந்த இடங்களில் பல இடங்களை நாஸியர்கள் பிரிட்டிஷ் விமானங்களுக்குப் பயந்து மூடி வைத்திருக்கிறார்கள். ஹாம்பர்க் ரயில்வே ஸ்டேஷனின்மேல் மரத்தையும், புல் பூண்டுகளையும் வைத்து மூடியிருக்கிறார்கள். விமானத்திலிருந்து பார்த்தால் ஒரு குன்றின் மீதும், வயல்கள் வழியாகவும் பாதைகள் செல்வது போலத் தோன்றுமாம். ஆல்ஸ்டம் லேர் என்ற ஏரியை பலகை போட்டு மூடியிருக்கிறார்கள். ஹனோவரில் ஒன்பது 'பெட்ரோல்' தடாகங்கள் பிரிட்டிஷ் வெடி குண்டுகளால் தாக்கப்பட்டு, பலத்த சேதமடைந்தன. மிச்சமிருக்கும் தடாகங்களின் மேல் வீடுகள் போல கட்டடங்கள் கட்டி வைத்திருக்கிறார்கள்.

மேற்கு ஜெர்மனியில் பிரிட்டிஷ் விமானப் படை பலமாக தாக்கிவருவதின் நோக்கம் ஈடேறிவிட்டதாகத் தெரிகிறது. ரஷ்யாவுக்கு அனுப்பியுள்ள ஜெர்மன் ஆகாய விமானங்கள் திரும்பி மேற்கு யுத்த அரங்கத்துக்கு வரவேண்டும் என்ற நோக்கத்துடன், பிரிட்டிஷ் விமானத் தாக்குதல் நடைபெற்று வந்தது. இப்போது ரஷ்யாவில் உள்ள ஜெர்மன் விமானங்கள் பல மேற்கே திரும்புவதாகத் தெரிகிறது. "டெய்லி எக்ஸ்பிரஸ்"ஸின் ஆகாய நிருபரான மிஸ்டர் பேகில் கார்டியூ கூறுவதாவது :—"பிரிட்டிஷ் விமானப் படையின் பகல் வேளைப் பாய்ச்சலைச் சமாளிப்பதற்காக நூற்றுக் கணக்கான ஜெர்மன் சண்டை விமானங்களும், மிகவும் அனுபவம் வாய்ந்த விமானிகளும் ரஷ்யப் போர் முனையிலிருந்து திருப்பி யழைக்கப்பட்டிருப்பதாக எனக்குத் தகவல் கிடைத்திருக்கிறது."

சென்ற வாரத்திய செய்திகளில், பிரிட்டனில் ஜெர்மன் விமானங்கள் சில இடங்களில் வெடி குண்டுகளைப் போட்டதாகத் தெரிகிறது. 32 இரவுகளாக, தொடர்ச்சியாக ஜெர்மன் விமானத் தாக்குதலில்லாத லண்டன்மா நகரத்தில் திங்கட்கிழமை பல ஜெர்மன் விமானங்கள் வெடி குண்டுகளைப் போட்டன. தென் கிழக்கு இங்கிலாந்து, லண்டன் பிரதேசம், டோவர் ஜலசந்தி, இவைகளின் மேல் விமானப் போர் நடந்தது.

## 2. ஆப்பிரிக்காவும், மத்தியதரைக் கடலும்.

வட ஆப்பிரிக்காவிலுள்ள டொப்ரூக்கில் விரோதி இடங்களுக்குள் மூன்று மைல் தூரம் நேசதேச வேவுகாரர்கள் சென்று, ஒரு இடத்தில் விரோதியுடன் கைகலந்து சண்டைசெய்து, பலரைக்கொன்று திரும்பினர்.

சென்ற சில வாரங்களாகக் ஜிப்ரால்டர் அரண் முஸ்தீப்புகள் பலப்படுத்தப்பட்டு வருகின்றன. துருப்புகளுக்குத் தினப்பயிற்சி கொடுக்கப்பட்டுவருகிறது. ஏராளமாக எண்ணெய், தண்ணீர், உணவு, புகையிலை, வேகவைக்கப்பட்ட மிட்டாய் வகைகளும் கூட பூமிக்குள் உள்ள களஞ்சியங்களில் சேமித்து வைக்கப்பட்டிருக்கின்றன.

அபிசீனியா நிலைமையில் மாறுதல் ஒன்றுமில்லை.

## 3. அமெரிக்காவும், அட்லாண்டிக் கடலும்.

ஜப்பான் இந்தோ-சீனாவில் பிரவேசித்ததினால் அமெரிக்காவிலுள்ள ஜப்பானிய ஐவேஜுகளை இறுக்கிப்பிடிக்கவேண்டுமென்று பிரஸிடெண்ட் ரூஸ்வெல்ட் உத்தரவிட்டிருக்கின்றார். சென்ற இரண்டு வருடங்களாக அமெரிக்கா, ஜப்பானுக்கு 'சப்ளை' செய்துகொண்டிருந்த எண்ணெயை இப்போது நிறுத்தி இன்னும் தீவிரமான பொருளாதார முற்றுகைபோட பிரஸிடெண்டு ரூஸ்வெல்ட் கருதுகின்றார் எனத்தெரிகின்றது.

அமெரிக்காவிலுள்ள பிரிட்டிஷ் ஸ்தானிகராகிய லார்ட் ஹாலிபாக்ஸ், அமெரிக்க அரசாங்க உதவி மந்திரியாகிய மிஸ்டர் சம்னர்வெல்சுடன் ஜப்பான் பொருளாதார முற்றுகையைப்பற்றிக்கலந்து ஆலோசித்தார்.

அமெரிக்கா, பிலிப்பைன் தீவுகளின் பாதுகாப்பு வசதிகளுக்காக, இப்போது ஒரு கோடி டாலர் கொடுத்திருக்கிறது.

## 4. கிரீசும், இத்தாலியும்.

இத்தாலிக்குள் ஜெர்மன் துருப்புகள் பெருவாரியாக வந்துகொண்டிருக்கின்றன. இவர்களுள்

பெரும்பாலோர் விமானப்படையைச்சேர்ந்தவர்கள். இத்தாலியத்துருப்புகள் நான்சிக்கும் பெல்ஜியத்திற்கும் போயிருப்பதால் இத்தாலியில் உள்ள ஜெர்மன் துருப்புகளின் பலம் அதிகரித்திருக்கின்றது. இத்தாலியிலுள்ள ஜெர்மன் பெண்களேயும், சிறுமிகளேயும், ஜெர்மனிக்குத் திரும்பிப்போகும்படி இத்தாலி ஜெர்மன் ஸ்தானீகர் உத்தரவிட்டிருக்கின்றார். ஸ்பெயினிலுள்ள ஜெர்மன் ஸ்திரீகளுக்கும் இம்மாதிரியான உத்தரவிடப்பட்டிருப்பதாக டெய்லி டெலகிராப் பத்திரிகையின் விசேஷநிருபர் தெரிவிக்கிறார். ஜெர்மனியில் வேலைகளுக்கு ஆள் தேவையாயிருப்பது இதற்கு ஒரு காரணமாயிருக்கலாமென்று யூகிக்கப்படுகிறது.

இத்தாலியைச்சேர்ந்த சிசிலி தீவின்மீது பிரிட்டிஷ் ஆகாயப்படை வெடிகுண்டுகளேப்போட்டுத் தாக்கியது.

இத்தாலிய ஆகாயப் படையின் தளபதி பெபரீகி ஆகாயச் – சண்டையில் கொல்லப்பட்டார். இவர் பாலஸ்தீனத்திலுள்ள ஹைபா தாக்குதல்கள் உள்பட பல வெடி குண்டு தாக்குதல்களில் பெரும் பங்கெடுத்துக்கொண்டவர். இவர் வெள்ளிப் பதக்கம் பரிசு பெற்றவர்.

### 5. பால்கன்ஸ், சிரியா, துருக்கி முதலியன.

சிரியாவில் யுத்தமுஸ்தீப்புள்ள இடங்களே பிரிட்டிஷ் விமானப்படை தாக்கிக்கொண்டிருக்கும்போது ஜெர்மன் விமானங்கள் சிரியா பொதுமக்கள்மேல் குண்டுகளேப்போட்டதற்கு ருசுக்கள் கிடைத்திருக்கின்றன. சமீபத்தில் 2,500 பவுண்டு எடையுள்ள ஜெர்மன் குண்டு, பெரூட்டில் பூமியிலிருந்து எடுக்கப்பட்டது. இந்த குண்டு வெடித்திருந்தால், பெரூட் பட்டணத்தில் பாதியும், ஸ்தானீகர்கள் காரியாலயங்களும், அமெரிக்க சர்வ கலாசாலேயும் அழிந்துபோயிருக்கும். பிரிட்டிஷ் விமானங்கள் குண்டுபோட்ட கணக்கைப்பார்த்ததில் 17 தடவைகள்தான், பெரூட் ராணுவ லட்சியங்கள் தாக்கப்பட்டன என்று தெரிகிறது. ஆனுல் நெருப்பு அணேப்பு இயந்திரங்கள் 27 இரவுகளில் வேலேசெய்ததாக பெரூட் நெருப்பு அணேப்பு இலாக்கா கணக்கிலிருக்கின்றது. மேலும் அந்த குண்டு விழுந்த சமயத்தில் பெரூட்டின்மேல் எந்த பிரிட்டிஷ் விமானமும் பறந்துபோகவில்லே.

துருக்கியைச்சேர்ந்த திரேஸ் பிரதேசத்தில் ஈனேஸ் விரிகுடாவின்மேல் பறந்துகொண்டிருந்த ஒரு இத்தாலிய விமானம் துருக்கி விமான எதிர்ப்புப்பீரங்கியால் சுட்டு வீழ்த்தப்பட்டது. ராணுவ அரண்களின் மேல் வேவுபார்த்துப் பறந்துகொண்டிருந்த ஜெர்மன் ஆகாய விமானம், எச்சரிக்கைகள் செய்தபிறகு, துருக்கி விமான எதிர்ப்புப் பீரங்கியால் சுடப்பட்டு விமான ஓட்டிகளுடன் கருங்கடலுக்குள் விழுந்து மறைந்தது.

### 6. கப்பல் நிலேமை.

ஒரு கான்வாய் கப்பலுக்குப் பாதுகாப்பாகப் போய்க்கொண்டிருந்த ‘பியர்லஸ்’ என்ற பிரிட்டிஷ் நாசகாரிக் கப்பல், மத்தியதரைக் கடலில் மூழ்கடிக்கப்பட்டது. அப்போது விரோதி ஆகாய விமானங்கள் பல சுட்டு வீழ்த்தப்பட்டன.

நார்வீஜியன் கடற்கரை யோரத்தில், 1,500 டன் எடையுள்ள விரோதி டாங்கர் கப்பலேயும், 700 டன் எடையுள்ள சப்ளே கப்பலேயும், மெஸ்ஸர்ஸ்மிட் 109 ஆகாய விமானத்தையும், இரண்டு பிரிட்டிஷ் விமானங்கள் குண்டுகள் போட்டுத் தாக்கியதில், மெஸ்ஸர்ஸ்மிட் விமானம் கடலில் சுட்டு வீழ்த்தப்பட்டது; மற்ற இரு கப்பல்களின் மாலுமிகள் எரிந்துகொண்டிருக்கும் தங்களுடைய கப்பல்களே விட்டுவிட்டுச் சிறு கப்பல்களில் ஏறித் தப்பித்துக்கொண்டனர்.

மத்திய கிழக்கரங்கத்தில், நாஸகாரிக் கப்பல்களின் பாதுகாப்புடன் சென்றுகொண்டிருந்த 7,000 டன் எடையுள்ள இரண்டு விரோதி கான்வாய் கப்பல்களும், 6,000 டன் எடையுள்ள ஒரு கப்பலும், 5 000 டன் எடையுள்ள மற்ருெரு கப்பலும், பிரிட்டிஷ் விமானங்களால் தாக்கப்பட்டுத் தீப்பிடித்து எரிந்துகொண்டிருந்தன. 5,000 டன் எடையுள்ள கப்பலில் வெடி மருந்துகளிருந்தகிஞல் குண்டுபட்டதும் அது வெடித்து உடனே முழுகிவிட்டது.

சாமான் ஏற்றிச் சென்று கொண்டிருந்த “விக்ரிட்” என்ற நார்வீஜியன் ஸ்டீமர் வட அட்லாண்டிக் சமுத்திரத்தில் மூழ்கடிக்கப்பட்டது. இங்கிலாந்திற்குச் செல்லும் செஞ்சிலுவை செவிலித் தாய்மார்கள் (நர்ஸ்கள்) இந்த ஸ்டீமரிலிருந்தார்களென்று தெரிகிறது,

### 7. தூரக் கிழக்கு அரங்கம்.

விஷிக்கும் ஜப்பானுக்கும் இடையே இந்தோ-சீனு சம்பந்தமாக ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டுவிட்டது. இந்த ஒப்பந்தத்தை அமுலுக்குக்கொண்டுவர ஜப்பானிய ஜெனரல் சுமிதா சைகோனுக்கு வந்து இந்தோ-சீனு கவர்னர் ஜெனரலாகிய உதவி அட்மிரல் டீகூஸுடன் கலந்து ஒரு முடிவிற்கு வந்திருக்கிறார். ஒப்பந்தத்தின்படி சைகோனிலும், சீம்ரீப்பிலுமுள்ள ஆகாய தளங்கள் உள்பட எட்டு ஆகாய தளங்கள் ஜப்பானுக்கு விடப்படும். ஒப்பந்தத்தின் முழு விவரங்கள் இன்னும் அதிகாரபூர்வமாக வெளியிடப்படவில்லே. ஜப்பானிய துருப்புகள் இந்தோ-சீனுவில் வந்திறங்கிக்கொண்டே இருக்கின்றன. சைகோனில் நான்கு ஜப்பானிய நாசகாரிகளும், காம்ரான் விரிகுடாவில் மூன்று நாசகாரிகளும் வைக்கப்பட்டிருக்கின்றன. கம்போடியாவில் ஜப்பானியப் படைகள் இறங்கிக்கொண்டிருக்கின்றன. 190 ராணுவ மோட்டார் லாரிகள் ஹனேயிக்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. ஜப்பானியத் துருப்புகளேத் தென் இந்தோ-சீனுவிலுள்ள ஒன்பது தளங்களுக்குக்கொண்டுபோக இந்த லாரிகள் உபயோகிக்கப்படும் எனத்தெரிகிறது.

தாய்லாந்திலுள்ள கடல், விமான தளங்கள் தனக்குவேண்டுமென்று ஜப்பான் தாய்லாந்து சர்க்காரைக் கேட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது. லண்டனில் இந்த செய்தி ஊர்ஜிதமாகவில்லே.

ஜப்பானின் இந்தோ-சீனு ஆக்கிரமிப்பைப்பற்றி பிரிட்டிஷ் அந்நிய நாட்டு மந்திரியாகிய மிஸ்டர் ஈடன் காமன்ஸ் சபையில் கண்டித்துப்பேசுகையில், அமெரிக்காவுடன் சேர்ந்து ஜப்பான் மீது நடவடிக்கை எடுக்கப்படுமென்றும், மலேயாவில் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாகவும் கூறிஞர்.

ஜப்பானுக்கு விரோதமாக இங்கிலாந்தும், அமெரிக்காவும், ரஷ்யாவும் இருப்பதால் ஜப்பான் இந்த மூன்று தேசங்களின் பூரண பொருளாதார முற்றுகைக்குத் தயாராயிருக்கவேண்டுமென்று ஒரு ஜப்பானிய பத்திரிகை கூறுகிறது.

ஜப்பான் இந்தோ-சீனுவில் பிரவேசித்ததன் காரணம், சீன–பர்மா ரோட்டைக் கைப்பற்றவும், ஜப்பானியப் படைகளே பிலிப்பைன்ஸ் (இந்தோ-சீனுவிற்கு 800 மைல் தூரத்திலுள்ளது), போர்னியோ (சைகோனுக்கு 600 மைல் தூரத்திலுள்ளது), சிங்கப்பூர் (சைகோனுக்கு 600 மைல் தூரத்திலுள்ளது) ஆகிய இவைகளுக்கு அருகே கொண்டுபோய் வைக்கவும், இந்தோ-சீனுவிலுள்ள இயற்கை வளங்களேத் தன் வசமாக்கவும் ஆகிய இவற்றிற்காகவே என்று ‘டைம்ஸ்’ பத்திரிகையின் அரசியல் நிருபர் கூறுகின்றார்.

சைபீரியாவைத் தாக்குவதற்காக, மஞ்சூகோவில், 17 பகுதிகளாகத் துருப்புகளேப்பிரித்து ஜப்பான் தயாராக இருப்பதாகவும், ரஷ்யாவின் வீழ்ச்சிக்குப் பிறகே சைபீரியா தாக்கப்படலாமென்றும் சீனுவிலிருந்து வந்த செய்தியிஞல் தெரிகின்றது. இந்தோ-சீனுவிற்கு அனுப்பப்பட்ட 40,000 ஜப்பானிய துருப்புகள், தாய்லாந்தையாவது அல்லது மலேயாவையாவது ஜெயிக்கக்கூடிய அவ்வளவு பெரியதல்ல; இதஞல் அபாயமுமில்லே. ஆனுல் ஜப்பானியத் துருப்புகள் இந்தோ-சீனுவில் பிரவேசித்தது பிரஞ்சு குடியேற்ற நாட்டிற்கு கிரகசாரமேயாகும்.

காம்ரான் விரிகுடா ஜப்பானிய துருப்புகளின் முழு ஆதிக்கத்தின் கீழ் இப்போதிருக்கின்றது.

பிரான்ஸ்-ஜப்பான் ஒப்பந்த நிபந்தனேகள் பின்வருமாறு: 1. இரு சர்க்காரும் இந்தோ-சீனுவின் பாதுகாப்பிற்கு வேண்டிய ராணுவ உதவியில் ஒத்துழைக்கவேண்டும்.

2. இந்த ஒத்துழைப்பிற்காக, வேண்டிய விசேஷ ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.

3. இந்த ஒப்பந்தம் எதற்காக ஏற்பட்டதோ அது முடியும்வரையில்தான் இது நீடித்திருக்கவேண்டும்.

### 8. விஷி.

பிரான்சின் பழைய சோஷியலிஸ்ட் மந்திரியாகிய மார்க்ஸ் டார்மாய், மான்டலிமார் நகரத்தில் ஒரு ஹோட்டல் அறையிலிருக்கும்போது, வெடிகுண்டு வெடித்ததால் இறந்தார். இவர் 1936-37-ல் பிளம் மந்திரி சபையிலும், 1937-38.ல் சோடம்ப்ஸ் மந்திரி சபையிலும் உள்நாட்டு மந்திரியாயிருந்தார்.

சென்ற சனிக்கிழமை விஷி மந்திரிசபை கூடி ஜப்பான் சம்பந்தமான விஷயங்களில் ஒரு முடிவிற்கு வந்தது.

**9. ஜெர்மனி அதிக்கிரமித்த நாடுகள்.**

நார்வேயிக்கு, ஹாம்பர்க் (ஜெர்மன்) பட்டணத்திலிருந்து திரும்பி வந்த ஒரு நார்வேக்காரர், அந்தப் பட்டணத்திலுள்ள வீடுகளின் சுவர்களில், "நாங்கள் சமாதானத்தை வேண்டுகிறோம்," "நாங்கள், எங்களுடைய புருஷர்களையும், புதல்வர்களையும் எங்களுடன் வந்து சேர வேண்டுகிறோம்," "பெர்லின் ஆட்சி எங்களுக்கு வேண்டாம்" என்று எங்கு பார்த்தாலும் எழுதப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார். ஜெர்மனிக்கு அனுசரணையாக இருந்த வேறு இரண்டு நார்வேக்காரர்கள் பெர்லின் நகரத் தோற்றத்தைக் கண்டு திடுக்கிட்டார்கள். அந்த நகரத்தின் முக்கியமான தெருக்களில் தான் வண்டிப் போக்குவரத்து நடைபெறுகின்றது. அங்குள்ள ஜனங்களில் பெரும்பாலோர் வயதானவர்களும், பெண்மக்களும், குழந்தைகளுமே ஆவர்.

ஸ்வீடன் வழியாக பின்லந்திற்குச் சென்றுகொண்டிருந்த இரண்டு ஜெர்மன் துருப்பு ரயில் வண்டிகள் நாசமாக்கப்பட்டன. ஜெர்மன் அதிகாரிகள் இதை ஆக்ஷேபித்து, ஸ்வீடன் சர்க்கார் போதிய பாதுகாப்பு முறைகளைக் கையாள வேண்டுமென்று கேட்டிருக்கின்றனர்.

வெலிகிபெச்கெர்க் என்ற பழைய யூகோஸ்லாவிய பட்டணத்தில் பொது உடைமைக் கக்ஷியினர் பயிர்களை அழித்து விட்டதினால் பிரபல பொது உடைமைக்காரர்களில் பலர் சுட்டுவிடப்பட்டனர் என்று ஜெர்மன் சமாச்சார ஸ்தாபனம் தெரிவிக்கிறது.

ஜெர்மன் துருப்புகள் ஆக்கிரமித்திருக்கும் பட்டணங்களிலும், கிராமங்களிலும், எங்கு பார்த்தாலும் "வி" (வெற்றிக்குறிகள்) இரவில் எழுதப்பட்டு, நாஸிகளுக்கு மனக்கலக்கத்தை யுண்டாக்கியிருக்கின்றது. நாஸிகள் தூங்கி எழுந்ததும் தாங்கள் வசிக்கும் கட்டடங்களின் மேலும், வீட்டு ஜன்னல்களின்மேலும், ஏறிச் செல்லும் மோட்டார்களின் மேலும் "வி" குறிகள் இடப்பட்டிருப்பதைக்கண்டு ஆச்சரியமடைந்தனர். இந்தக் குறியின் அர்த்தம் நாஸிகளுக்குத் தெரியும்.

பெல்ஜியத்திலுள்ள பிரஸ்ஸெல்ஸ் பட்டணத்தின் நகரசபை அதிகாரிகளுக்கு, இந்த மாதிரியாக "வி" குறிபோடும் வழக்கம் நிறுத்தப்படாவிட்டால், நகரசபைகள், பொறுப்பாளிகள் ஆவார்களென்றும் ஜனங்களும் கடுமையாகத் தண்டிக்கப்படுவார்களென்றும் நாஸி அதிகாரிகள் தெரிவித்திருக்கின்றனர்.

சுவரில் "வி" குறியை அழித்துவிடாமல் வைத்திருந்ததற்காக மாலியேன் (பெல்ஜியம்) நகரத்தார்களுக்கு நாஸி அதிகாரிகள் நாலு லக்ஷம் பிராங்கு (பிரஞ்சு நாணயம்) அபராதம் போட்டார்களென்று பாரிஸ் ரேடியோ கூறுகிறது.

நார்வேயை ஜெர்மனிக்கு காட்டிக்கொடுத்த குவிஸ்லிங் என்பவருடைய உயிருக்கே ஆபத்து அதிகமானதினால் 16 மெய்க்காப்பாளர்கள் இரவும் பகலும் அவரைப் பாதுகாத்து வருகின்றார்களாம். அவரைப் பார்ப்பதற்கு யாரும் அதிகமாக விடப்படுவதில்லை.

**10 நடுநிலைமை நாடுகள்.**

சென்ற பிப்ரவரி மாதத்தில் செய்துகொண்டதாக கூறப்படும் ஸ்பானிஷ்–ஜெர்மன் ஒப்பந்தத்தைப்பற்றி ஜார்ஜ் ஸ்லோகோம் என்பவர் சண்டே எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் சமீபத்தில் கூறியிருப்பதன் சாராம்சம் பின்வருமாறு :

பிரிட்டனுக்கு எதிராக யுத்தத்தில் இறங்க ஸ்பானிஷ் சர்க்கார் ஒத்துக்கொண்டிருப்பதாகத் தெரிகிறது. இந்த ஸ்பானிஷ்–ஜெர்மன் ஒப்பந்தத்தின் முக்கிய விஷயம் என்னவென்றால், சில நிபந்தனைகள் சமீபகாலத்தில்தான் நிறைவேற்றப்பட்டன. இவை ஜெர்மன் படைகள் மத்தியதரைக்கடலில்—கிரீட்டில்—இருப்பதும் ; கொஞ்சம் கோதுமை ஸ்பெயினுக்கு போயிருப்பதும்தான். பிரெஞ்சுக்காரர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட யுத்தப் பொருள்கள் ஜெர்மனியிடம் அதிகமாயிருப்பதால் பிராங்கோவின் சேனைகளுக்கு ஜெர்மனி உதவி செய்யக்கூடும்.

இந்த உலக யுத்தத்தில், ஆப்கனிஸ்தானம் நடுநிலைமை வகிக்கும் என்று காபூலிலிருந்து அதிகார பூர்வமாகத் தெரிவிக்கப்பட்டது.

தென் அமெரிக்காவிலுள்ள பெரு–ஈக்வேடார் சண்டை சென்ற சனிக்கிழமை மாலை 6 மணிக்கு நிறுத்திவிடப்பட்டது. ஆர்ஜண்டைனு, யுனைடெட் ஸ்டேட்ஸ் பிரேசில் தேசங்கள் சண்டை நிறுத்தத்திற்கு மத்யஸ்தம் வகித்தன.

போர்ச்சுகீசிய பிரசிடெண்ட் கார்மோனு அட்லாண்டிக் கடலிலுள்ள அஸோர்ஸ் தீவுகளுக்குச் சென்றிருக்கிறார். போர்ச்சுகல் சமாதானத்தோடு இருக்க விரும்புகிறதென்றும், ஆனால் சமயம் ஏற்பட்டால் சண்டைக்குப் பின் வாங்காதென்றும் அவர் தெரிவித்தார்.

தென் அமெரிக்காவிலுள்ள பெரு தேசத்திலுள்ள லிமா பட்டணத்திற்குச் சென்ற ஜெர்மன் ஸ்தானிகர், ரேடியோ ஒலிபரப்புக் கருவியை ரகசியமாக வைத்துக் கொண்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. அவருடைய சாமான்களெல்லாம் அர்ஜெண்டைனுவிற்குத் திருப்பி அனுப்பப்பட்டன. அங்கு அவைகள் பறிமுதல் செய்யப்பட்டன. ரேடியோ ஒலிபரப்புக் கருவியுடன், அர்ஜெண்டைனுவில் நாஸிகளின் பிரசார வேலை சம்பந்தமான பல காகிதங்களும் இருந்தன. பறிமுதல் செய்ததை வான்தென்மான் என்ற ஜெர்மன் ஸ்தானிகர் ஆக்ஷேபித்தார். அர்ஜெண்டைனு வெளிநாட்டு மந்திரி, அனுமதிக்கப்படாத சாமான்கள் கொண்டு வந்தது சரியல்ல என்று பதில் கூறினார்.

**11. ரஷ்யாவும், ஜெர்மனியும்.**

ரஷ்யாவில் கடுமையான யுத்தம் நடைபெற்று வருகிறது. சென்ற வாரத்தில், ரஷ்யர்கள் 10 எதிரிக் கப்பல்களை முழுகடித்தார்கள் ; ஹெல்சிங்கி (பின்லாந்தின் தலைநகரம்)யின் மேல் வெடிகுண்டுகள் போட்டார்கள் ; ஸ்மோலெண்சிக்கின் அருகாமையில் நடந்த சண்டையில் இரண்டு ஜெர்மன் பட்டாளங்கள் முழுவதும் நாசமாக்கப்பட்டன ; ரஷ்ய ஆகாய விமானங்கள் 58 எதிரி விமானங்களைச் சுட்டு வீழ்த்தின; ஜெர்மன் விமானங்கள் மாஸ்கோவைத் தாக்க முயன்றன ; சில விமானங்கள் மாத்திரம் உட்சென்று வெடிகுண்டுகள் போட முடிந்தது ; மற்றவைகள் துரத்தியடிக்கப்பட்டன ; மாஸ்கோவின் விமான எதிர்ப்பு ரகசியங்களை அறிய முயன்ற ஜெர்மன் வேவு விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன ; மாஸ்கோவைத் தாக்கிய முயற்சி ஒன்றும் பயன் பெறவில்லை: ருமேனியாவிலுள்ள கான்ஸ்டான்சாவின் மேல் வெடிகுண்டுகள் போடப்பட்டன-

கடைசியாக வெளியான செய்தியில், ஜூலை 27, 28 தேதிகளில் மாஸ்கோவைத் தாக்கிய ஜெர்மன் விமானங்களில் 74 சுட்டு வீழ்த்தப்பட்டன. 51 ரஷ்ய விமானங்கள் நஷ்டமாயின. ஜூலை 28-ந்தேதி 10 ஜெர்மன் விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன.

மாஸ்கோவைத் தாக்கிய முயற்சியில் தோல்வி பெற்றதனால், இப்போது ஹிட்லர் யூக்ரெயினின் தலைநகரான கீவின்மேல் தன் முழு கவனத்தையும் செலுத்தப் போவதாகத் தெரிகிறதென்று "ராய்ட்டர்" மாஸ்கோ நிருபர் கூறுகிறார்.

ஜெர்மனியின் மின்னல் தாக்குதல் ரஷ்யாவால் சிதைக்கப்பட்டது. ஸ்மோலெண்சிக் பிரதேசத்தில் ஜெர்மானியர்களுக்குப் பலத்த நஷ்டம் விளைவிக்கப்பட்டது.

ரஷ்யர்கள் செப்டம்பர் மாதம் வரைக்கும் ஜெர்மானியர்களைத் தடுத்து நிற்பார்களானால், ஹிட்லருடைய முடிவுகால ஆரம்பம் ஏற்படும் என்று சிகாகோவில் மிஸ்டர் வெண்டல் வில்கி கூறினார்.

ரஷ்யாவும், போலந்தும், ஒரு உடன்படிக்கை செய்துகொண்டன. அதன்படி 6 லட்சம் போலிஷ் கைதிகள் விடுதலை செய்யப்படுவார்கள். போலந்து பிரிவினை ரத்து செய்யப்பட்டது.

**குறிப்பு.—யுத்த சஞ்சிகையின் பிரதிகளைத் தயவுசெய்து ஒன்றின்பின் ஒன்றாக விடாமல் சேர்த்துவரவும்.**

[சென்னை இன்பர்மேஷன் டைரெக்டர் அவர்களால் அன்புடன் அளிக்கப்பட்டது.]

MADRAS : PRINTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.